# SKM VAIDHYA AMIRTHAM

*Quarterly News Letter of SKM Siddha and Ayurveda*

**Vol : 1 Issue: 1. July - September - 2010**




அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி



திரு. SKM மயிலானந்தன்
நிறுவனர்
SKM குழுமங்கள்


**Editor:**
Mrs.S.Kumutaavalli Shivkumar

**Associate Editors :**
Dr. L. Sivakumar BSMS
Dr. L. Prassannakumar MD (Ay)

**Production & Design :**
Dr. G. Murugan BSMS

**Members :**
Dr. I. Kumaranandham MD (S)
Dr. P. Rajesh BAMS

**Advisory Board :**
Dr. G. Sivaraman BSMS PhD
Dr. L. Mahadevan MD (Ay)


## SKM நிறுவனர் வாழ்த்துச்செய்தி

சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகள் நமது நாட்டில வாழ்ந்த சித்தர்கள் மற்றும் ஆச்சாரியார்களின் ஞானத்தில் உதித்தது. நமது நாட்டின் தொன்மையான கலைகளில் ஒன்றாகவும், நமது பாரம்பரிய பெருமைகளுள் முக்கியமானதாகவும் திகழ்கிறது.

நவீன விஞ்ஞானம் தோன்றுவதற்கு முன்பே பரிசோதனைச் சாலைகள் இல்லாத காலத்திலேயே மூலிகைகள், தாது மற்றும் ஜீவ பொருட்களில் உள்ள மருத்துவ குணங்களையும், நோய்கள் குறித்தும், அவற்றை நீக்கும் முறைகள் குறித்தும், தங்களுடைய ஞானத்தில் கண்டறிந்து வைத்தியம் செய்து அந்த அனுபவத்தை ஓலைச் சுவடிகளாகப் பதிவு செய்து வழங்கி உள்ளனர்.

சித்தா, ஆயுர்வேத மருந்துகள் உயிராற்றலைப் பெருக்கி உடல் கட்டுக்களை வலிமைப் படுத்தி, மக்கள் நோயின்றி வாழவும் வந்த நோயை தீர்த்துக் கொள்ளவும் நமது நாட்டில் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்று விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப பல கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு சித்தா, ஆயுர்வேதா மருத்துவ பட்டதாரிகள் இத்துறையில் பணியாற்றுகின்றனர். மேலும் சித்தா ஆயுர்வேதா மருந்துகளின் ஆராய்ச்சித்துறையிலும் பல மருத்துவர்கள் ஆய்வு செய்கின்றனர்.

உலகளவில் சித்த ஆயுர்வேத மருத்துவம் சிறப்பாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நம்முடைய மருத்துவத்தையும் மருந்துகளையும் பிற பலதுறை அறிஞர்களின் கூட்டு முயற்சியுடன் அதன் தன்மை, நோய் தீர்க்கும் விதம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன், கொள்ளை நோய்களை நீக்கும் திறன் ஆகியவை குறித்து ஆய்வு செய்து ஆவணப்படுத்த வேண்டும். மேலும் மருத்துவமனையில் மருந்துகளை பிரயோகிக்கும் முறை, அதன் நுணுக்கம் ஆகியவற்றையும் ஆவணப்படுத்த வேண்டும்.

மேற்கூறியவாறு ஆய்வு செய்தும், ஆவணப்படுத்திய விவரங்களை அனைத்து மருத்துவர்களுக்கும் தெரிவித்து அறிவு பகிர்வு செய்தல் நம்முடைய தலையாய பணியாகும். இதனை நமது **SKM C**enter for **A**yush system **R**esearch and **E**ducation அறக்கட்டளை ஆரம்பித்துள்ளது. நமது SKM மருத்துவமனை மற்றும் பிற அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் அனுபவங்கள், தத்துவ விளக்கங்கள், ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவற்றை பெற்று ஆவணப்படுத்தி SKM வைத்திய அமிர்தம் இதழ் மூலமாக அனைத்து மருத்துவர்களுக்கும், ஆய்வு நிறுவனங்களுக்கும், மருத்துவ கல்லூரிகளுக்கும் கருத்துப்பகிர்வு செய்யப்படும். மேலும் மாணவர்களிடையே ஆராய்ச்சி ஆர்வத்தை உண்டாக்க அவர்களுடைய கட்டுரைகளும் பதிவு செய்யப்படும்.

இந்த இதழானது தொழில்துறை, மருத்துவமனைகள், மருத்துவர்கள் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் ஆகியோரை இணைக்கும் பாலமாக இருக்கும் என்பதுடன் இந்த SKM வைத்திய அமிர்தம் இதழ் சிறப்பான சேவைகளை ஆற்ற வேண்டுமென்றும், அனைவரும் இந்த இதழைப் படித்துப் பயன் பெற வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

திரு. SKM மயிலானந்தன்
நிறுவனர்
SKM குழுமங்கள்

# இந்திய மருத்துவ துறையில் SKM நிறுவனத்தின் பங்களிப்பு:



## SKM அறக்கட்டளையின் தொடக்கம்

சித்த ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகள் என கூட்டாக அழைக்கப்படும் இந்திய மருத்துவத்தின் மீது கொண்ட விருப்பத்தினாலும், நம்பிக்கையாலும் இந்த மருத்துவத்தின் சேவையை பரவலாக்க, பலதுறை ஆய்வுகள் செய்து நிரூபிக்கப்பட்ட மருத்துவமாக (Evidence Based Medical System) மாற்ற வேண்டும் என்கின்ற உயர்ந்த லட்சியத்தை கொண்டவர் நமது **அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி** அவர்களுடைய எண்ணத்தின் காரணமாக 1986 ஆம் ஆண்டு ஈரோடு நகரில் ஒரு வாடகை வீட்டில் முதன் முதலாக மருத்துவ சேவை SKM நிறுவனங்களின் தலைவர் திரு. SKM **மயிலானந்தன்** அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து 1989ஆம் ஆண்டு **SKM உடல் மற்றும் மனநல அறக்கட்டளை** தொடங்கப்பட்டு அதன் கீழ் சித்த மருத்துவமனை நடத்தப்பட்டது.

SKM அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட போது அதன் அறங்காவலர் மற்றும் மருத்துவமனையில் மருத்துவராக **S.முத்துசாமி ஐயா** அவர்கள் பொறுப்பேற்று சிறந்த முறையில் சேவை ஆற்றினார்கள். அருட்தந்தை அவர்களால **சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்** என்று பாராட்டு பெற்றவர். தன்னுடைய மருத்துவ அனுபவ அறிவாலும், இன்முகத்தாலும் பல நூற்றுக்கணக்கான நோயாளர்களை சித்த மருந்துக்களின் மூலம் குணப்படுத்தியவர். முதலில் வாரம் மூன்று நாட்கள் என செயல்பட்ட SKM அறக்கட்டளை மருத்துவமனை, SKM மயிலானந்தன் அவர்களின் ஆர்வத்தாலும், ஈடுபட்டாலும், மருத்துவர் திரு.**S.முத்துசாமி ஐயா** அவர்களின் மருத்துவ சேவையாலும் மருத்துவமனை நன்கு சேவையாற்றி வாரத்தின் 6 நாட்களுக்கு செயல்பட ஆரம்பித்தது. சித்த ஆயுர்வேத மருந்துகளுடன் அருட்தந்தை அவர்களின் எளிய முறை உடற்பயிற்சி மற்றும் தியான முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு முழுமையான சிகிச்சை முறை (Holistic Health approach) அளிக்கபடுகிறது. நோயாளர்களின் எண்ணிக்கை கருதி மருத்துவமனை தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டு அனுபவம் வாய்ந்த மருத்துவர் குழுவால் பல விதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.



## நிர்வாக இயக்குநரின் தொலைநோக்குப் பார்வை:- SKM மருத்துவமனை

சித்த ஆயுர்வேத மருத்துவத்தின் மூலம் நோயாளர்கள் குணமடைந்த விவரத்தை தற்போதைய நவீன முறையில் பதிவு செய்து, அவ்வாறு பதிவு செய்ததை அனைத்து மருத்துவர்களுக்கும் பரவச் செய்ய வேண்டும் என்ற தொலை நோக்கு பார்வைகொண்ட SKM நிறுவன நிர்வாக இயக்குநர் **SKM.ஸ்ரீ சிவ்குமார்** அவர்களால் நம்முடைய மருத்துவமனையின் அனைத்து பிரிவுகளும் கணினி மயமாக்கப்பட்டது (ERP System). அனைத்து நோயாளர்களின் நோய் விவரம், வயது, பாலினம், தொழில் தன்மை, நோய் காலம், நோய் குணமான விதம், தியானத்தின் பங்கு, பேதி, எண்ணெய் குளியல், பஞ்சகர்ம சிகிச்சையின் பங்கு ஆகியவை குறித்த அனைத்து விவரங்களும் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட விவரங்கள் அனைத்து **SKM வைத்திய அமிர்தம் இதழின்** மூலம் அனைத்து மருத்துவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.





## SKM அறக்கட்டளை மருந்து தொழிற்சாலை

SKM அறக்கட்டளையின் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டு காலம் வரை மருந்துகள் ஈரோட்டில் உள்ள வாடகை வீட்டிலேயே தயாரிக்கபட்டது. தேவையை கருத்தில் கொண்டு 1994 ஆம் ஆண்டு சாமிநாதபுரத்தில் தற்போதைய இடத்தில் சிறிய அளவில் தொழிற்சாலை ஆரம்பிக்கபட்டு மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டன. மரு. **முத்துசாமி ஐயாவின்** மேற்பார்வையில் மருந்துகள் தயாரித்து ஈரோடு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. மரு.முத்துசாமி ஐயா அவர்கள் வைத்தியத்தில் ஆர்வம் கொண்டிருந்த அதே வேளையில், தன்னுடைய மருத்துவ அனுபவ அறிவை பிற மருத்துவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டு, பல மருத்துவர்களுக்கு மருந்துகளின் பிரயோகம் குறித்து கற்றுக் கொடுத்தார். அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மருந்து முறைகளை அந்தந்த இடங்களுக்கு சென்று கற்றறிந்து சுமார் 200 மருந்துகளுக்கு தயாரிப்பு உரிமம் பெற்று சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்படியாக தரத்தில் சிறந்த உயர்ந்த மருந்துகள் உற்பத்தி செய்து **SKM அறக்கட்டளை** மருத்துவமனைக்கும், 1997ஆம் ஆண்டு முதல் பிற மருத்துவர்களுக்கும் வழங்கப்பட்டது. அதே சமயத்தில் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை மன்றங்களில் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டு மருத்துவச் சேவை வழங்கப்பட்டது.



## GMP தரச்சான்றிதழ்:

தரத்தில் சிறந்த மருந்துகள் உற்பத்தி செய்யவும், மருந்து பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதி செய்யவும் இந்திய அரசினால் 2002 ஆம் ஆண்டு (Good Manufacturing Practices Certificate) அறிமுகப்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் SKM அறக்கட்டளை சித்த மருந்து தொழிற்சாலை தமிழகத்தில் முதன்முறையாக GMP தரசான்றிதழ் பெற்று அதனை நடைமுறை படுத்தி சாதனை புரிந்தது.



## நிர்வாக இயக்குநரின் தொலை நோக்கு பார்வை:- SKM தொழிற்சாலை

தேவை மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டும், நமது பாரம்பரியம் மிக்க மருந்துகளின் பயன்பாட்டினை மேலும் பரவலாக்கவும், உலகதரத்தில் மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் SKM அறக்கட்டளையை ஒரு நிறுவன அமைப்பாக SKM சித்தா ஆயுர்வேதா கம்பெனி இந்தியா லிமிடெட் என்று மாற்றம் செய்யபட்டு சுமார் 12கோடி முதலீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் திட்டமிடப்பட்டு உலக தரத்தில் நிறுள் நமது தொழிற்சாலை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## ISO தரச்சான்றிதழ்:

தரத்திற்கான GMP சான்றிதழுடன், தர மேலாண்மைக்காகவும், வாடிக்கையாளர் சேவையை மேலும் சிறப்பாக செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் நமது SKM நிறுவனத்திற்கு ISO 9001 : 2000 தர மேலாண்மை சான்றிதழ் பெறபபட்டது.

## புதிய அனுபவ சித்த மருந்துகள்:

வைத்தியர் முத்துசாமி ஐயா அவர்களின் அனுபவ மருந்துகளுடன் பிற அனுபவம் வாய்ந்த வைத்தியர்களின் அனுபவ மருந்துகள் மற்றும் தலை சிறந்த மருத்துவ நூல்களில உள்ள மருந்துகள் ஆகியவற்றை ஆய்வு செய்து இரண்டாம் தொகுதியாக சுமார் 100 சித்தமருந்துகளுக்கு தயாரிப்பு உரிமம் பெறப்பட்டு கடந்த 1 வருடமாக மருத்துவர்களுக்கு வழங்கபட்டு வருகிறது.

## ஆயுர்வேத மருந்துகள்



சித்த மருந்துகளுடன் சுமார் 135 ஆயுர் வேத சாஸ்திரிய மருந்துகளுக்கு தயாரிப்பு உரிமம் பெறப்பட்டு கடந்த 1 வருடமாக மருத்துவர்களுக்கு வழங்கபட்டு வருகிறது. மேலும் ஆயுர்வேதத்தின் ஆசவ அரிஸ்ட மருந்துகளை உற்பத்தி செய்து மருத்துவர்களின் பயன்பாட்டிற்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## யுனானி மருந்துகள்

மேலும் யுனானி மருந்துகளின் தேவையைக்கருதி அவற்றையும் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது மருத்துவர்களிடையே உபயோகத்திலுள்ள சுமார் 150 மருந்துகளுக்கு தயாரிப்பு உரிமம் பெறுவதற்கு பணிகள் நடைபெறுகிறது.

## ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டு



தற்போது பயன்பாட்டிலுள்ள மருந்துகளை மேலும் தரபப்படுத்தவும், புதிய மருந்துகளை உருவாக்கவும், அனைவரும் பயன்படுத்தத்தக்க வகையில் உற்பத்தி செய்யவும் சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி மேற்கொள்ளபபடுகிறது. .

## SKM - அரசுத்துறை கூட்டுத்திட்டங்கள்

நமது இந்திய அரசின் Ayush துறையின் நலத்திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்திய மாநில அரசுடன் கூட்டுத்திட்டங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

## நவீன முறையில் மருந்துகள் உற்பத்தி



மருந்துகளின் பயன்பாட்டு வடிவத்தை நவீனப்படுத்தி மாத்திரை, கேப்ஸ்சூல்ஸ், சிரப்புகள், ஆயின்ட்மென்ட், கிரீம், ஜெல் மற்றும் லினிமென்ட் ஆகியன உற்பத்தி செய்து மருத்துவர்களின் பயன்பாட்டிற்கு வழங்க ஆய்வுகள் நடத்தப்படுகிறது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக அருட்தந்தை அவர்கள் கூறிய வாக்கின்படி அரசாங்க மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் அனுப்பப்படுகிறது. தரமான, பாதுகாப்பான, செயல்திறன் மிக்க மருந்துகளை உறபத்தி செய்து வழங்குதல், மருந்துகள் பிரயோகிக்கும் முறைகளை தரப்படுத்தி ஆய்வு செய்து ஆவணப்படுத்தி அனைத்து மருத்துவர்களுக்கும வழங்குதல், இந்திய மருந்துவத்தின் சிறப்புகளை பதிவு செய்து ஆவணப்படுத்தி அனைத்து மருத்துவர்களுக்கும், மக்களுக்கும் பரவச்செய்தல், மற்றும் அனைவரும் பயன்படுத்தும் வகையில் நவீன முறையில மருந்துகளை மாற்றி வழங்குதல் ஆகியவற்றை திட்டமிட்டு, நிர்வாக இயக்குநரின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகிறது.

# சித்த மருத்துவம்

## நேற்று - இன்று - நாளை



முனைவர்.மரு.கு.சிவராமன் BSMS PhD

உறுப்பினர், தேசிய சித்த மருந்தியல் குழு, இந்திய அரசு

இணைய முகவரி: herbsiddha@gmail.com

யுந்தே- மத்திய ஆப்பிரிக்காவின் ஒரு ஓரத்தில் உள்ள கேமரூன் நாட்டின் தலைநகரம். கால்பந்து ரசிகர்கள் மட்டுமே கொஞ்சம் அறிந்திருக்கும் அந்த நாட்டில் கடந்த ஆண்டின் இறுதியில் பாரம்பரிய மருத்துவர்க்கான ஒரு கலந்துரையாடல் கூட்டம் உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலில் பிரெஞ்சு அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. உலகெங்கும் இருந்து (கிட்டத்தட்ட 39 நாட்டு பிரதிநிதிகள்- 84 அறிவியலாளர்கள்) பங்கேற்ற அக்கூட்டத்தின் தலைமை விஞ்ஞானி திரு.லூக் மாண்டேங்கர், இன்று உலகெங்கும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் எச்.ஐ.வி. வைரஸ் கிருமியை கண்டறிந்த நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானி அவர். ஒரு மதிய உணவு இடைவேளையில் அவருடன் உரையாடிய போது அவர் சொன்ன கருத்தின் தமிழாக்கம் கீழே.

"இந்த வைரஸ்-ஐ கொல்ல மருந்து எப்போது வருமென தெரியாது. ஆனால், உடலை வலுப்படுத்தி, உடலின் நோய் எதிர்ப்பாற்றலை நெறிப்படுத்தி, வைரஸை செயலிழக்கச் செய்து, உடல் நடத்தும் போராட்டத்தில் பிற உறுப்புகள் வலு குறையா வண்ணம் உடலையும் மனதையும் பேணும் நல்ல பாரம்பரிய மருந்துகளும், உணவும் மட்டுமே எச்.ஐ.வி-யில் இருந்து இவ்வுலகினைக் காக்கும். அந்த திறன் பாரம்பரிய மருத்துவ முறைகட்கு உள்ளதென கருதுகிறேன்." -என்பது.

லூக் மாண்டேங்கரின் அந்த கருதுகோள், சித்தமருத்துவப் பார்வைக்கானத் தொடக்கப் புள்ளி என கருதுகிறேன். முழுமையான அணுகுமுறை(holistic approach) எனும் தனித்துவத்தை மட்டும் சித்தமருத்துவம் பெற்றிருக்கவில்லை. அதையும் தாண்டி அதன் தத்துவப் பின்னணி, உலகின் ஒடுக்கப்படும் சமூகமும் உயரும் சமத்துவச் செயல்பாடு, நவீனத்தையும் உள்வாங்கும் ஏற்புடைமை என சித்த மருத்துவத்தின் வீச்சும் நீட்சியும் இதனை முழுதாய்ப் புரிந்தோரும், புரிய முனைவோர் எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. இது, இன்றைய கேள்விகட்கும் சவால்களுக்கும் விடை தரும் விடியல் கீற்றும் கூட ..எப்படி? சுருக்கமாய்ச் சொல்ல விழைவோம்



திரு.லூக் மாண்டேங்கர்.



## நேற்று...

சித்த மருத்துவத் தத்துவம் அல்லது புரிதல், சாங்கிய, புத்த, சமண தத்துவங்களுக்கு முற்பட்டது. நோய் "ஆவி அல்லது முற்பிறப்பின் கொடூரங்களுக்கான' தண்டனை என்ற புரிதலில் இருந்து விலகி, அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம் என்ற பொருள் முதல்வாதத்தை முன்வைத்து உடலுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள இணைப்பை புரிந்து, பதிவு செய்து, நோயை நாடவும்/நோயைத் தேடவும் செய்தது சித்த மருத்துவம். ஏறத்தாழ 4000-5000 ஆண்டுகளேனும் இப்புரிதலில் நோயின் கூறுகளையும் குணங்களையும் தத்தம் நுட்பமான, ஆழ்ந்த அக/ புற பார்வையில் கணித்து, அதனைத் தீர்த்து மனித உடல்நல மேம்பாட்டிற்கும் அவன் சமூக இணக்கங்களுக்கும் சேர்த்து வழி வகுத்தது சித்தமருத்துவம். 1800களில் தொழிற் புரட்சியும் அதன் நீட்சியாய் தொடர்ந்த இயந்திர யுகத்தில் 'முழுமை புரிதலின்'(holistic) முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டு நோய்க் காரணிகள் நவீனமாய் அறியப்பட்டு (reductionistic), புதிய உடல்இயங்கியலுக்கு இணக்கமான மருந்துகள் ஏராளமாய்ச் சந்தைப்படுத்தப்பட்டன. அதில் வாழ்நாள் காலம் நீண்டதும் பல தொற்றின் மரணப்பிடியில் நாம் தப்பித்ததும் மறக்கவோ மறுக்கவோ முடியாதது.

SKM

## இன்று......



பழைய தொற்றுக்கள் நம்மை விட்டு விலகினாலும், இன்று மதுமேகம், இரத்தக் கொதிப்பு, புற்று நோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற இந்த தொற்றாத நோய்களின் பிடி இந்தியாவில்(ஏன்.. உலகெங்கும்) மிக அதிகமாக இறுகி வருவதாக முர்ரே மற்றும் லோப்பசு போன்ற மருத்துவ அறிஞர்கள் எச்சரித்து உள்ளனர். கிட்டத்தட்ட 1000-ல் 767 பேரது மரணம் இவ்வகை தொற்றாத வாழ்வியல் நோய்களால் நிகழ்கிறது என்கிறது அவரது அறிக்கை. அதிலும் மாரடைப்பினால், இரத்தக் கொதிப்பினால், புற்று நோயினால் மரணம் நிகழ்வதாகவும், ஏறத்தாழ 26%ற்கு இவை அடுத்தடுத்த ஆண்டுகளில் உயரக் கூடும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. நேற்றைய தொழில் நுட்ப நீட்சியில் மறந்த 'முழுமையால்' நாம் இழந்ததும் இழந்துவருவதும் பல. உணவுப் பழக்கவழக்க மாறுபாடுகள், உடலுழைப்பு குறைவான வேலை, மது, புகை போன்ற பழக்கம், மன உளைச்சல், மனச்சுமை, அக மகிழ்வின்மை..என்ற நீடிக்கும் பட்டியல்தான்.. இவை தான் இந்த நாட்பட்ட தொற்றா வாழ்வியலின் பிடியை இறுக்குவது. பெருகும் இந்த இறுக்கங்களில் பழைய பாரம்பரியங்கள் அரை மனதுடன் ஆங்காங்கே தூசு தட்டப் படுகிறது. அதன் தத்துவமோ சமூகப்பிணைப்போ கட்டறுக்கப்பட்டு நானோ துகள்களும் நுண் மூலக்கூறுகளும் வேகவேகமாக தேடப்படுகின்றன. ஆவணப்படுத்தப்படுகின்றன. காப்புரிமைக்கு காத்து நிற்கின்றன. சித்த மருத்துவமும்..ஆனால் கடைசி வரிசையில்! பிரித்தெடுக்கப்பட்ட ஒகமும், உணவு மாண்பும் fitness center-வளப்பிலும் Nutraceuticals and functional foods- வணிகத்திலும் பில்லியன் டாலரில் பெருகி வருகிறது.

## நாளை

உடல் வெறும் "புரதக் கற்றை'(proteomics)'யாக மட்டுமே பார்க்கும் காலம்; நோய் வற்றா வணிக ஆதாரமாக மட்டும் வளர்ந்த நவீன மருந்துக் குழுமங்களால் சிந்திக்கப்படும் காலம்; இன்னும் புதிய நுண்ணுயிர்கள் படைக்கப்படுவதும், மருந்துக் காப்புரிமை வர்த்தகதின் மூலம் கோலோச்சுவதும் அதிகம் நடக்க இருக்கும் காலம். பொதுமைப்படுத்தப்படாத துறையும்-பொருளும் வளர்ந்த நாடுகளால் வல்லரசால் நிர்மூலமாக்கப்படும் காலம். இதில் நாம் எப்படி பயணிக்க வேண்டும்? நம் பற்பங்களின் 'நானோ துகளமைப்பை' நிலை நாட்டியா? "களை யல்ல நிஜம்'-' எங்கள் மூலிகை என கட்டுரை வாசித்தா? சித்தமருத்துவத்தின் தனித்துவம் அதன் பன்முகத் தன்மையும்(Synergy), ஒவ்வொரு நோயருக்கும் ஒவ்வொரு விதமாய்ப் (pharmaco-genitic variations) பணி செய்வதும் தான். பொதுமைபடுத்த முடியாதது அதன் சிறப்பே தவிர இழுக்கல்ல. பொதுமைப்படுத்துவதுற்காக அதனை நவீன ஆய்விற்கு மட்டும் உட்படுத்தி விளக்குவது அதன் பன்முகத்தன்மையை சிதைக்கத்தான் செய்யும். நவீன ஆய்வுகளுக்கு உள்ளாக்குதல் குறித்த சர்ச்சையில், மருந்துகளுக்கான மூலப் பொருட்களின் கலப்படமற்ற நிலைக்கும், மருந்துகள் முடிவுற்றுள்ளதா எனும் ஆய்விற்கும், இன்னும் பெரும் தேவைக்கென உற்பத்தித்திறனை அதிகரித்தலில் மட்டும் நவீன அறிவியல் உத்திகளை பயன் படுத்துதல் ஓரளவிற்கு நலம் பயக்கக் கூடும். Pharmaco genitics படி உணவையும் கற்பத்தையும் பானத்தையும் வேண்டுமானால் ஓரளவிற்குப் பொதுமைப்படுத்தலாமே தவிர மொத்தமாய் மருந்துகளைப் பொதுமைப்படுத்துவது, சிதைவிற்கு வழிவகுத்து விடும். சித்த மருத்துவத்தின் முழுமை நவீன (நவீனம் மேற்கத்தியம் அல்ல.கொஞ்சம் பிறதுறையினருக்கும் புரிதல் தரும் அறிவியல் மட்டுமே.) விளக்கங்களுடன், தத்துவப் புரிதலுடன் சாமனியனுக்கும் போய்ச் சேரும் வகையில் நம் ஆய்வும், மருத்துவப் பயிற்சியும், மருந்து செய்முறையும், அரசின் நல்வாழ்வுக் கொள்கைகளும் அமைக்கப்படுவது தான் காலத்தின் கட்டாயம். முயற்சிப்போமே!





# Gout and its management through Ayurveda



**Dr. L. Mahadevan,** BAMS, MD.

**Dr. Y. Mahadeva Iyer's Sri Sarada Ayruvedic Hosptial,**
Derisanamcope,Kanyakumari District - 629851,
Tamil Nadu.
Phone : (04652) 282239 / 282449 (Hospital)
Fax: 04652 - 281934
E-mail: mahadevan101@gmail.com, panchakarma101@yahoo.co.in
www.sarada-ayurveda.com

Gout is a disorder characterized by sudden recurring attacks of painful arthritis caused by deposits of monosodium urate crystals which accumulate in joints because of an abnormally high uric acid level in the blood. Joint inflammation can become chronic and deforming after repeated attack. Most of the people who have this attack develop kidney stones.

## Symptoms

Usually the onset will be sudden, triggered by injury, alcoholic intake, high protein rich food or emotional stress. Severe pain occurs suddenly in one or more joints often at night. Joints swell and skin over the joints would appear red or purple, shiny, warm and even touching of the skin will be highly painful. This disorder will affect the joints at base of the big toe causing a condition called "podagra". Crystals may form in the periphery of the joints because they are cooler than the central part of the body and urates get crystallized in cooler temperatures.

Gout rarely affects spine, hips and shoulders. In acute attack there will be fever, sick feeling and rapid heart beat. Usually it is seen before the age of 30. Men are commonly affected than women.



## Diagnosis

Fasting uric acid level which is less 5 to 6 mg/dL is normal. Ayurvedically speaking this condition looks like vatarakta. Vatarakta also starts from feet. Gout also involves the metatarso phalangeal joint of the big toe. Remission and exacerbation (bhutva bhutva) are commonly seen in both conditions. Pathogenesis of gout through the deposit of uric acid crystals and the influence of rakta dhatu has got similarity.



Articular features are characterized in both the conditions. In vata rakta janu, amsa and padasulam and Sotham will be present. Redness (raga), warmth (usna), fever (jvara), fatigue (klama), cutaneous manifestation (tvak dushti), cutaneous nodules (arbuda upadrava) are also mentioned. This disease is produced as a result of marga rodha of vata by rakta. Here an equal importance is given to vata and rakta. It is an avarana condition. It is called Adyarogam because sedentary people who eat high protein meal get this disease. It is called Kudam because joints are targeted. It is called vata balasam because vata becomes more powerful.

Vataraktam is a big spectrum of disorder under which we can bring Rheumatoid Arthritis, SLE, Sjogren's syndrome, Gouty Arthritis and many other mixed connective tissue disorders. Here katu, amla, ushna, lavana, and vidahi aharas become an important etiology. Animal proteins, spicy foods and alcoholic beverages are also said as etiology. Gout is triggered by travel and injury. In ayurveda also traveling in animals after taking a vidahi ahara is highly stressed as a nidana. Here vata is increased by its own etiology. Ruksa and sita guna of vata are increased. Rakta is increased by vidahi food. The vata and rakta travels because of their chala and sara guna respectively and



undergo dosha dusya sammurchana in sandhi sthana. Sandhi is a seat of kapha which is predominant of sita and snigdha. It is the seat of slesmadhara kala (Synovial membrane) also. Here ruksha guna of vata and vidahi of rakta destruct the snigdha guna of kapha. There is ama avastha which is characterized by svayathu, sula and jvara. In acute phase Jaluka avacaranam in metatarsophalangeal joint or any other involved joints is useful. In pittaika vatarakta ama pacana and pitta samana drugs are selected. Then tikta rasa oushada becomes the first choice in the management.

Tikta has laghu, pitta samana, jvara hara and ama pacana gunas. Even though madura rasa and kashaya rasa are pitta samana they are avoided because of their guru and stambhana gunas. Among the tikta rasa amirtha shadangam kashayam, guducyadi kashayam, punarnavadi kashayam and shaddaranam are highly useful. After amapacana snehapana is done with maha tiktaka gritham, madhuyashtiyadi tailam or ksirabala tailam. Then it is followed by virecana with nimbamrta erandam and milk.




Milk is vatapitta samana drug. So ksheera kashayas of guduci, laghu panchamulam & satavari are also useful in niramavasta.

Then pitta samana vataraktagna vasti yogas are selected. The vasti by name guducyadi yapanam given in our hospital is highly effective. The yoga is as follows

| | |
|---|---|
| **Makshikam** | **250 ml** |
| **Lavanam** | **15 gm** |
| **Gritham (Sukumara gritham)** | **125 ml** |
| **Tailam (maduyashtiyadi tailam)** | **125 ml** |
| **Kalkam (Yashtimadhu satahvadi kalkam)** | **15 gm** |
| **Kashayam (Guducyadi gana ksira kashayam)** | **500 ml** |
| **Total (approx)** | **1000 ml** |

"Here ksiram is pitta samanam, guduci is vataraktagna and sukumara gritham is anulomanam.

This is found to be very effective in reducing the pittapradanya vatarakta especially gouty arthritis. To prevent the remission after the treatment rasayanas can be given. For pitta pradanya vatarkatha chyvanaprasam is the ideal rasayana.

To avoid



There are also other drugs which are highly useful. Medicines like amirthadi satvam, kaisora guggulu, amirthadi guggulu, varatiktadi kashayam, ayapathra triphala are highly useful in gout. In pitta pradaniya sopha ellumnishadi churnam, guduci patradi churnam can be given as a lepa. For reducing the pain and burning sensation dhanyamla dhara is given. Luke warm bala kshira dhara also relieves the pain instantaneously.

## Diet

### To avoid

- Spicy, salty, deep fried, fatty, protein rich diet.
- Black gram, horse gram, Ground nut, sesame, mustard and jaggery.
- Raddish, potato, yam, cabbage, brinjal and sugarcane.
- Smoking and alcohol

To take



### To take

- 2 to 3 litre of water every day.
- Green gram, lentils and wheat in excess.
- Amarus, bitter gourd, snake gourd, drumstick, onion, dates and fresh fruit juices.








## NATIONAL AWARD



Prestigious National Innovation Foundation Award - 2002,
by National Innovation Foundation, under Dept. of Science and Technology,
Govt. of India to our Mentor **Dr.S.R.MUTHUSAMY** RIMP
honoured by His. Excellency **Dr. A.P.J. ABDUL KALAM**
The President of India
on 17-12-2002 at NPL Auditorium, Pusa Campus, New Delhi

**Printed & Published By:**

# SKM Center for Ayush system Research and Education

SAMINATHAPURAM, MODAKKURICHI, ERODE - 638 104. TAMILNADU INDIA

Tel Fax: +91 424 2500590, 2501238 Website URL : www.skmsiddha.org

**Feedback your comments to the E-mail: vaidhyaamirtham@skmsiddha.org techsupport@skmsiddha.org**

**Our SKM Contributors panel -**

**Dr. P.K.Saravanakumar** BSMS, **Mr. M. Senthilkumar** B.Sc., M.B.A., **Mr. M. Visvanath** M.Sc., **Dr. R.Lathachandhiran** BSMS, **Dr. A.Sharfunnisa** BSMS,